**செய்தி வெளியீடு எண்: 379** **நாள்: 13.06.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (13.6.2018) தலைமைச் செயலகத்தில், காஞ்சிபுரம் மாவட்டம், ஊனமாஞ்சேரியில் உள்ள தமிழ்நாடு காவலர் உயர்பயிற்சியக வளாகத்தில் தற்காலிகமாக நிறுவப்பட்டுள்ள காவலர் பொதுப் பள்ளியை திறந்து வைத்தார்கள். மேலும், இப்பள்ளியில் பணியாற்றுவதற்காக ஒரு தலைமை ஆசிரியை மற்றும் 5 ஆசிரியைகளுக்கு மாற்றுப் பணி ஆணைகளையும், 50 மாணவ, மாணவிகளுக்கு இப்பள்ளியில் சேர்ந்து படிப்பதற்கான சேர்க்கை ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 மாணவ, மாணவிகளுக்கு சேர்க்கை ஆணைகளையும் வழங்கினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 23.4.2013 அன்று சட்டப்பேரவையில், காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூர் ‘‘உங்கள் சொந்த இல்லம்’’ திட்டப் பயனாளிகளின் நலன் கருதியும் மற்றும் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பணிபுரியும் காவல்துறை பணியாளர்களின் நலன் கருதியும், மேலக்கோட்டையூரில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் உயர்தரம் பொருந்திய உண்டு உறைவிடப் பள்ளி தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, இந்த உண்டு உறைவிடப் பள்ளியானது, ‘‘காவலர் பொதுப் பள்ளி’’ (Police Public School) என்ற பெயரில் நிறுவுவதற்காக 51 கோடியே 14 லட்சத்து 98 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்வதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

இப்பள்ளிக்கு, காஞ்சிபுரம் மாவட்டம், ஊனமாஞ்சேரியில் உள்ள தமிழ்நாடு காவலர் உயர்பயிற்சியக வளாகத்தில் தற்காலிகமாக இடம் தேர்வு செய்யப்பட்டு, 2018–2019ஆம் கல்வியாண்டில் மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ், ஆங்கில வழி கல்வியில் 5–ஆம் வகுப்பு வரை தொடங்கிட அரசாணை வெளியிடப்பட்டது. இக்காவலர் பொதுப் பள்ளியில் காவலர்களின் குழந்தைகள் மட்டுமின்றி, அப்பகுதியிலுள்ள பொதுமக்களின் குழந்தைகளும் கல்வி பயில்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இக்காவலர் பொதுப் பள்ளியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்து, இப்பள்ளியில் பணியாற்றுவதற்காக ஒரு தலைமை ஆசிரியை

மற்றும் 5 ஆசிரியைகளுக்கு மாற்றுப் பணி ஆணைகளையும், 50 மாணவ, மாணவிகளுக்கு சேர்க்கை ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 மாணவ, மாணவிகளுக்கு சேர்க்கை ஆணைகளையும் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.ஏ. செங்கோட்டையன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு.தே.க. ராஜேந்திரன், இ.கா.ப., காவல்துறை கூடுதல் இயக்குநர் தமிழ்நாடு காவலர் உயர் பயிற்சியகம் திரு.எம்.எஸ் ஜாபர் சேட் இ.கா.ப., காவல்துறை கூடுதல் இயக்குநர் (நலன்) திரு. ராஜீவ் குமார் இ.கா.ப. மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**
**நாள்: 13.6.2018**